**நாள்: 28.04.2026.**
**O.S. No. 42/2021**
**பெயர்: ஆயிசா சமீமா.    க/பெ. ஷேக்தாவூது**
**பி.வா.சா.2**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அத்தை ஆவர். அப்துல் பாரி தற்போது ஊரில் உள்ளரா என்றால் இல்லை வெளிநாட்டில் உள்ளார். சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. யார் என்னை சாட்சியமளிக்க அழைத்து வந்தார் என்றால் நவஸ்தீன். அவர் தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். முதல் விசாரணை சாட்சிய விவரங்களை யார் கூறினார்கள் என்றால் நான் தான் கூறினேன். நான் எங்கு பிறந்தேன் என்றால் மாப்பிள்ளைகுப்பத்தில் உள்ள எனது வீட்டில் பிறந்தேன். நான் பிறந்தது முதல் அங்கு தான் வசிக்கிறேனா என்றால் சிறு வயதில் அங்கி வசித்தேன் தற்போது அப்துல்பாரியுடன் வசிக்கிறேன். அப்துல்பாரி பழைய மற்றும் புதிய வீட்டு முகவரி தெரியுமா என்றால் தெரியாது. அப்துல்பாரி எந்த வருடம் அவர் பெயரில் சொந்தமாக வீடு வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. அவர் எப்போது வீடு கட்டினால் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது பள்ளி சான்றிதழ்களில் என்ன முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 19 என்ற எண் கொண்ட வீட்டின் முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது வாக்காளர் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டையில் என்ன முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எண் 19 பள்ளிவாசல் தெரு மாப்பிள்ளைக்குப்பம் என்ற முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். 2018ல் எனக்கு திருமணம் நடந்தவுடன் எங்கு வசித்தேன் என்றால் 6 மாதம் கணவர் வீட்டில் வசித்தேன் தற்போது எனது அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லலதால் அவருடன் மாப்பிள்ளைகுப்பத்தில் வசித்து வருகிறேன். எனது அம்மா வீடு எங்கு உள்ளது என்றால் தாவா சொத்திற்கு எதிரே உள்ளது. எனது அம்மா வீட்டின் பழைய எண் என்ன என்றால் 6 ஆகும். புதிய கதவு எண் தெரியாது. எனது அம்மா வசிக்கும் வீட்டை எந்த ஆண்டு கட்டத்தொடங்கி எந்த ஆண்டு முடித்தோம் என்றால் 2017 தொடங்கி 2022ல் முடித்தோம். அந்த வீட்டை இடித்து கட்டுவதற்கு முன்பு எனது

அம்மாவும் நானும் அங்கு தான் குடியிருந்தோம் என்றால் சரிதான். எனது திருமண பத்திரிக்கையை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் பொய்யானது என்றால் சரியல்ல. வாதி தற்போது மாப்பிள்ளைகுப்பத்தில் தான் வசிக்கிறார் என்றாலும் திருச்சியில் வசிக்கவில்லை என்றாலும் சரிதான். என்னுடைய சாட்சியத்தில் வாதி திருச்சியில் வசிப்பதாக கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். அப்துல்பாரி ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.